26th March 1969]

Sales of dynamite

* 219 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the places where dynamite used for deepening agricultural wells are sold;

(*b*) whether explosives such as Gelatine and Detonator are not sold anywhere in Madurai district ;

(*c*) whether it is a fact that one should come all the way to Madras to purchase these explosives ; and

(*d*) whether there is any proposal to distribute them through the Agricultural Department in each district ?

வெடி மருந்து விற்பனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த உபயோகப்படுத்தும் வெடி மருந்து எங்கெங்கு விற்கப்படுகிறது ?

(இ) ஜலட்டின், டிடோனேட்டர் போன்ற வெடி மருந்துகள் மதுரை மாவட்டத்தில் எங்கும் விற்கப்படுவதில்லையா ?

(உ) சென்னைக்கு வந்து இந்த சாதனங்களை வாங்க வேண்டுமென்பது உண்மையா ?

(எ) இவற்றை விவசாய இலாகா மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) சென்னையிலும் பெங்களூரிலும் விற்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) ஆம்.

(எ) ஆம். இவற்றை வேளாண்மைத்துறை மூலம் " துறையின் கிடங்கிலிருந்து " ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கும் செயற்குறிப்பு இருக்கிறது. இப்பொழுது வேளாண்மைத்துறையின் பரிவுரையின் மேல்தான் கிணறுகளை ஆழப்படுத்த வெடி மருந்துகள் வழங்கப்படு கின்றன. ஆனால் வெடி மருந்து வாங்க மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமம் வழங்குகிறார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த வெடி மருந்துகள் ஜில்லா தலைநகரங்களில் கொடுப்பதற்கு எப்போதிருந்து ஏற்பாடு செய்ய இருக்கிறார்கள் ? எவ்வளவு சீக்கிரம் அது அமுல் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தற்சமயம் சென்னையிலும், பெங்களூரிலும் தான் இருக்கிறது. மேலும் 5 மாவட்டங்களில் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூரில் வெடி மருந்து சேமிப்புக் கிடங்கு கட்ட முயற்சிக்கப்பட்டது. மேலும் மதுரை, தென்னுற்காடு, திருச்சி, சேலம் மாவட்டங்களில் விரைவில் அக்கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். விரைவில் மதுரை, சேலம் இரண்டு இடங்களிலும் நாகப்பூரில் உள்ள வெடி மருந்துகள் தலைமை ஆய்வாளர் ஒப்புதல் கிடைத்த பிறகு கட்டப் படும். தென் ஆற்காட்டில் விரைவில் கட்டுவதற்கான திட்டம் இருக் கிறது. உழவர்களுக்கு வயலில் கொண்டுபோகக் கூடிய சூழ்நிலையில் ஆறு வாகன்கள் வாங்குவதற்கும் அவற்றை ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு கிடங்குக்கு இரண்டு வண்டிகள் வீதம் கொடுப்பதற்குத் திட்டம் இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, **Dynamite** போன்ற மருந்து பல்லாவரத்தில் செய்கிறார்கள். அதைக் கொண்டு சாதாரணமாகக் குழி போடுகிற இடங்களில் வெடித்தால் பயனுள்ள வகையில் கிணறுகளை வெட்டுவதற்கு உபயோகமாகிறது. அது மாதிரி திட்டத்தைப் பரவலாக ஆக்குதவற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இப்போது பல்லாவரத்திலிருந்து தான் வருகிறது. சென்னை என்று குறிப்பிட்டிருப்பது பல்லாவரத்தைத்தான்.

மாண்புமிகு திரு எம். முத்துசாமி : பல்லாவரம் என்ற ஒரேயிடத்தில் இதை வைத்திருப்பதால், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு அது தொல்லையாக இருப்பதைக் கருதி, ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை ஏஜெண்டுகள் நியமித்து அவற்றை வினியோகிக்க முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அது பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. பி. டி. முத்து: இந்தத் தோட்டா மருந்து விற்கும் லைசென்சு முறையில், ஒரு சிலரே முப்பது, நாற்பது லைசென்சுகளை வைத்துக்கொண்டு ஒரு ரூபாய்க்கு விற்க வேண்டியவற்றை ரூ. 4 அல்லது ரூ. 5 என்ற அளவுக்கு விற்று வருவது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படிப்பட்ட தகவல் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Rat menace

* 220 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether a grant for killing the rats at the rate of 10 Paise per rat was requested at the Agricultural Seminar held at Thanjavur during July 1968; and

(b) if so, the action taken by the Government thereon ?

எலித் தொல்லை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜூலையில் கூடிய தஞ்சை விவசாயக் கருத்தரங்கில் எலி ஒன்றுக்கு 10 பைசா கொடுத்து எலியைக் கொல்ல மான்யம் கோரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அரசு இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) அத்திட்டத்தினால் ஏற்படும் செலவு மிக அதிகமாக இருக்குமாதலாலும், அவ்வாறு தொகை கொடுப்பதில் நடைமுறையில் இடர்பாடுகள் ஏற்படுமாதலாலும் அக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, எலியினால் வருகிற உணவு நஷ்டம் எவ்வளவு இருக்குமென்று ஏதேனும் மதிப்பீடு இருக்கிறதா ? அதைப் பற்றி மதிப்பீடு செய்து, தவளைகளைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் போல சைனா போன்ற நாடுகளுக்கு எலிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்தால், செலவில்லாமல் நஷ்டம் தவிர்க்கப்படுமென்பதை அரசு உணருகிறதா ?